பக்கங்கள் 15

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 04 செவ்வாய்க்கிழமை 20.08.2024 | அதிர்வு 018

## தாய்ப்பால் புரைக்கேறி பெண் குழந்தை மரணம்

### யாழ். மிருசுவிலில் சோகம்

தாய்ப்பால் புரைக்கேறியதில் மூன்றரை மாத குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம், மிருசுவில்

05▶

### ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவு?

# தமிழரசு எடுக்கும் முடிவின்படி தமிழர்கள் செயற்பட வேண்டும்

### சாணக்கியன் எம்.பி. கோரிக்கை



“வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாம் பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்தே முடிவை எடுக்கவுள்ளோம். எனவே, தமிழ் மக்கள், எமது கட்சி எடுக்கும் முடிவின்படி செயற்பட வேண்டும்” - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

05▶

# மு.காவில் இருந்து ஹரீஸ் எம்.பி. இடைநிறுத்தம்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸை தற்காலிகமாக இடைநிறுத்தக் கட்சித் தலைமை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் எழுத்து மூலம் இன்று அவருக்கு அறிவிக்கப்படவுள்ளது.

ஓட்டமாவடியில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கூட்டத்தில் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் இதனைத் தெரிவித்துள்ளார்.



## மனிதப் புதைகுழிகளுக்கு உரிய நீதி கோரி கொக்குத்தொடுவாயில் இன்று போராட்டம்



முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு முன்பாக இன்று செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின்

05▶




அண்மையில் உயர் நீதிமன்ற உத்தரவினால் எம்.பி.பதவிகளையும் அதனால் அமைச்சர் பதவிகளையும் இழந்த மனுஷ நாணயக்கார மற்றும் ஹரினின் பெர்னாண்டோ ஆகியோரை அவர்கள் அதுவரை பொறுப்பாக இருந்த அமைச்சுகள் தொடர்பில் தமக்கான ஆலோசகர்களாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நியமித்திருக்கின்றமை இப்போது பெரும் சர்ச்சையாக உருவெடுத்திருக்கின்றது.

இது தேர்தல் விதிமுறைகளை மீறிய நடவடிக்கை என்று தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸநாயக்கவும், தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான பவ்ரலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராய்ச்சியும் குற்றம் சுமத்தி உள்ளனர்.

05▶



# சுங்க வாகனத்தில் சிக்கிய வெளிநாட்டு மதுபானங்கள்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கொழும்புத் துறைமுகப் பாதுகாப்புப் பிரிவினர் சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு மதுபான போத்தல்களை நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

சுங்கத் திணைக்களத்திற்குச் சொந்தமான கெப் வண்டியொன்றில் இருந்து மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் துறைமுக அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது அந்த வண்டியில் இருந்த 158 வெளிநாட்டு மதுபான போத்தல்களை துறைமுக பாதுகாப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

துறைமுக இலக்கம் 2 எல்.பி வாயிலில் இருந்து மதுபானத்தை வெளியே எடுக்க முயற்சித்த போதே சிக்கியுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து வாகன சாரதியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.




# ஜனாதிபதித் தேர்தல் கடமைகளுக்காக 2 லட்சத்துக்கும் அதிக அரச ஊழியர்கள்

இந்த வருடம் தேர்தல் கடமைகளில் இரண்டு லட்சம் முதல் இரண்டே கால் லட்சம் வரை எண்ணிக்கையிலான அரச ஊழியர்களை ஈடுபடுத்தவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் ஒரு லட்சத்து முப்பதாயிரத்துக்கும் அதிகமான வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளதாக ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதுஅனைத்துவேட்பாளர்களுக்கும் சின்னங்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கேகாலை மாவட்டத்தில் அலங்கார மீன் வளர்ப்பு!

கேகாலை மாவட்டத்தில் அலங்கார மீன் வளர்ப்பை மேற்கொள்வது தொடர்பான ஆய்வுகள் இன்று மேற்கொள்ளப்படவுள்ளன.

ருவன்வெல்ல பிரதேச செயலகத்தினூடாக இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்போது மீன்களுக்கு ஏற்படும் நோய் தாக்கங்கள் மற்றும் நீர் மாதிரிகள் என்பன சோதனைக்குட்படுத்தப்படவுள்ளன.

சப்ரகமுவ பல்கலைகழகத்தின் பேராசிரியர் நிரோஷன் வல்பிட்டவின் தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.





# ஐக்கிய தேசியக் கட்சிக்கு அமைப்பாளர்கள் நியமனம்

ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள் பலருக்கு நேற்று கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், அநுராதபுரம் மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பி.ஹரிசன் மற்றும் டபிள்யூ.பி.ஏகநாயக்க ஆகியோரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடமிருந்து நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அத்துடன், காலி மாவட்ட அமைப்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம, ஹம்பாந்தோட்டை மாவட்ட அமைப்பாளர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜி. திஸ்ஸகுட்டியாராச்சி மற்றும் தேவக வீரசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.
















Vijaya Jewellery's
Tamil Fest
தமிழர் தெரு விழா
SINCE 2015 முதல்
AUGUST
SAT 24 12PM - 11PM
SUN 25 11AM - 9PM
MARKHAM ROAD
BETWEEN MCNICOLL & PASSMORE
FREE ADMISSION
POWERED BY
YORK U
Markham Campus
உலகிலேயே அதிக மக்கள் பங்கேற்கும்
மிகப்பெரும் தமிழர் தெருவிழா
Largest Tamil Street Festival in the World
EXPECTED ATTENDEES
300,000 +
Riddim of Remix
Super Sons
TITLE SPONSOR
Vijaya Jewellery
POWERED BY SPONSOR
YORK U
Markham Campus
SILVER SPONSORS
LISA
PRADON
Realty Team
WOW! WING
MARKETING PARTNER
Print Fast
PROUDLY PRESENTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
SUPPORTED BY
Canada
MEDIA SPONSORS
ATN
east FM 102.7 தமிழ்
info@canadiantamilcongress.ca 416.240.0078 tamilfest.ca @TamilFest

Build Your Dream Home with us....
NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"
Our Services:
Architectural Designing
Structural Planning
2D & 3D Drawing
BOQ Assessment
Interior Designing
Landscaping
For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.

# விரைவில் புதிய அரசியல் கூட்டணி

## பிரதமர் தினேஷ் அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் புதிய அரசியல் அணியை உருவாக்குவதற்கான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகப் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அந்த அரசியல் சக்தியை கட்டியெழுப்ப பிரதமர் என்ற முறையில் தனது ஆசியையும் ஆதரவையும் தொடர்ந்து வழங்குவதாகவும் அவர் கூறினார்.

மல்வத்து மகாநாயக்கர் சங்கைக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீசித்தார்த்த சுமங்கல மகாநாயக்க தேரரை நேற்றுமுன் தினம் சந்தித்து நல்லாசி பெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதமர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"அரசைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு ஆதரவு வழங்கிய பெரும்பான்மையான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக மேற்கொண்ட தீர்மானத்தை நிராகரித்து ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளனர்.

அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன போன்ற பல கட்சிகளை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர்.

இரண்டு வருடங்களாக மிகவும் சிரமப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட நாடு தற்போது சரியான பாதையில் முன்னேற்றம் கண்டு வருகின்றது. இந்த வெற்றியை மேலும் பாதுகாப்பதற்கும் முன்னெடுப்பதற்கும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றோம். இப்போதே உள்ளூராட்சி முதல் நாடாளுமன்றம் வரை அனைத்து எம்.பிக்களும் கைகோர்த்து வருகின்றனர்.

இதனால் அடுத்த தேர்தலில் வேட்புமனு கிடைக்காமல் போய் விடுமோ என்று யாரும் பயப்பட வேண்டாம். அவர்களுக்கு இவ்வாறான அச்சுறுத்தலுக்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

புதிய அரசியல் சக்தியை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம். அதற்காக, எனது முழு ஒத்துழைப்பையும் ஆசிகளையும் வழங்குகின்றேன்." – என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தனவும் கலந்துகொண்டார்.

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அரச செலவுகளை ஏற்படுத்தும் புதிய நியமனங்களைச் செய்யக்கூடாது என்பது விதிமுறையாகும். அது மீறப்பட்டுள்ளது என இப்போது சுட்டிக் காட்டப்படுகிறது.

மேற்படி இருவரும் – ஹறினும் மனுஷவும் – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்காக தேர்தல் பிரசார வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருப்பவர்கள் அந்தப் பணிகளுக்கு அமைச்சின் வாகனங்கள் மற்றும் வசதிகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவே ஜனாதிபதியின் ஆலோசகர் என்ற நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன எனக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

இது தொடர்பில் தேர்தல் ஆணையத்தின் முடிவு இன்று அல்லது நாளை வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

\+ + +

தற்போது நடைபெறும் ஜனாதிபதி தேர்தலையொட்டிய பிரசாரங்களுக்காக இப்போது முதல் அடுத்த 30 நாள்களுக்குள் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தலா 300 கோடி ரூபா முதல் 500 கோடி ரூபா வரை செலவிட்டுப் போகின்றார்கள் என்று இந்தத் தேர்தலின் வேட்பாளர்களில் ஒருவரான ஜானக இரட்நாயக்க நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கின்றார்

\+ + +

2010 ஜனாதிபதி தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளராக இறங்கி வெற்றி பெற முடியாமல் போன சரத் பொன்சேகா இப்போது சுயேச்சை வேட்பாளராக இந்த ஜனாதிபதி தேர்தலிலும் களமிறங்கி இருக்கின்றார்.

தென்னிலங்கையில் அவரின் கன்னிப் பிரச்சாரக் கூட்டத்திற்கு மக்களே வரவில்லை என்று முகப்புத்தகங்களில் வெற்று மைதானப் படங்களுடன் விமர்சனங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இப்போது ஒரு கூட்டத்தில் அவர் கூறிய தகவல் நோக்கற்பாலது.

"கோட்டாபய ராஜபக்ஷவை நான் நன்கு அறிவேன். அதனால்தான் 2019 தேர்தல் பிரச்சாரத்தின் போது தப்பித் தவறி கோட்டாபய ராஜபக்ஷ அந்த தேர்தலில் வென்று ஜனாதிபதியானால் அவர் இரண்டு வருடங்களுக்குள் நாட்டை விட்டு ஓட வேண்டி நேரும். – என்று பகிரங்கமாகக் கூறியிருந்தேன். அது அப்படியே நடந்துள்ளது."

"இப்போது இன்னொன்றைக் கூறுகிறேன். தப்பித்தவறி இம்முறை சஜித் பிரேமதாஸா ஜனாதிபதியானால் அவர் ஒரு வருடத்துக்குள் நாட்டை விட்டு ஓட வேண்டி நேரும். இதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்."

என்று கூறியிருக்கிறார் அவர். பொறுத்திருந்து பார்ப்போம்.

### தமிழரசு எடுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வவுனியாவில் இறுதியாக நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட 33 உறுப்பினர்களில் ஒருவரைத் தவிர மற்றைய உறுப்பினர்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் தேவையற்ற என்ற கருத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

இவ்வாறான நிலையில் கட்சி உறுப்பினர்கள் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்கும் வகையில் கூட்டங்களில் கலந்துகொள்வதைத் தவிர்த்தல் வேண்டும். ஏனெனில் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதால் கட்சி உறுப்பினர்களிடையே குழப்ப நிலை உருவாகலாம். நாம் கட்சி ரீதியாகத் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரிப்பதாக எதுவித கருத்தும் இதுவரை வெளியிடவில்லை.

அரியநேத்திரன் தனது விருப்பத்துக் கிணங்க சில கட்சிகளின் ஆதரவுடன் தமிழ்ப் பொது வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

இன்னொரு வேட்பாளரை வெல்ல வைப்பதற்காகவே இவ்வாறான தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் அரங்கேற்றப்பட்டது என்பது முற்று முழுதான உண்மை.

இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உறுதியாக இருக்கிறார். ஏனெனில் அவருக்கான அடையாளம் இல்லை. அவர் மக்களால் நிராகரிக்கப்பட்டவர். இது தமிழ் மக்களை அடகு வைக்கும் செயற்பாடாகும்.

ரணில் விக்கிரமசிங்க தனக்கு எதிராக நாமல் ராஜபக்ஷ களம் இறங்குவார் என எதிர்பார்க்கவில்லை. ரணிலின் நினைப்பில் ஜனாதிபதித் தேர்தல் வரும்போது மொட்டுக் கட்சி தனக்கு ஆதரவளிக்கும் என்ற உணர்வே காணப்பட்டது.

தமிழ்ப் பற்றாளர்கள் ராஜபக்ஷ தரப்பினருக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்பது தெரியும். சிங்கள வாக்குகளைப் பிரிக்கும் நோக்குடனேயே நாமல் ராஜபக்ஷ போட்டியிடுகின்றார்.

இஸ்லாமிய சகோதரர்களில் ஒரு தரப்பினர் ரணில் விக்கிரமசிங்க பக்கமும், மற்றைய தரப்பினர் சஜித் பிரேமதாஸ பக்கமும் இருக்கின்றனர்.

அந்தவகையில், நாம் பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்தே முடிவை எடுக்கவுள்ளோம்.

எனவே, தமிழ் மக்கள் எமது கட்சி எடுக்கும் முடிவின்படி செயற்பட வேண்டும்." – என்றார்.

### மனிதப் புதைகுழிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

உறவுகளின் சங்கத் தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப் புதைகுழிகளுக்கு உரிய நீதி கோரி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

### தாய்ப்பால் புரைக்கேறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கில் இந்தச் சம்பவம் இடம்பெறுள்ளது.

கபிலன் நிவேதா என்ற பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.



# வடக்கு கிழக்கு ஒன்றிணையக் கூடாது; பொலிஸ், காணி அதிகாரங்கள் இல்லை

## ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ கூறுகின்றார்

வட மாகாண இளைஞர்கள் என் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

களனியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஐக்கிய இலங்கை என்ற நிலைப் பாட்டிலேயே நாங்கள் தொடர்ந்தும் உள்ளோம். வடக்கு கிழக்கு ஒன்றிணையக் கூடாது என்ற நிலைப் பாடே எம்மிடம் உள்ளது. பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் பரவலாக்கப்படக் கூடாது என்ற கொள்கையே பேணப்படுகிறது.

ஏனைய கட்சிகளைப் போன்று தேர்தல் காலங்களின் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காகக் கொள்கையை மாற்றப் போவதில்லை. இது வடக்கு இளைஞர்களுக்கும் நன்கு தெரியும்."– என்றார்.













# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வரிச்சலுகை நாடகம்

தேர்தல் என்றாலே மக்களின் காதில் அரசியல்வாதிகள் பூச்சூற்றும் திருவிழா என்றுதான் அர்த்தம்.

வாக்குறுதிகள் என்ற பெயரில் அரசியல்வாதிகள் அள்ளி வீசும் வாய்ச்சவடால் பேச்சுக்களைப் பொதுமக்கள் நம்பி ஏமாறுவதுதான் வழமை. இந்த ஏமாற்றுதலில் கெட்டிக்காரன் தேர்தலில் வென்று தன்னை நிலை நிறுத்திக் கொள்வான். இதுதான் காலம் தோறும் நடக்கும் விடயம்.

இப்போதும் இந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இப்படித்தான் பொது மக்கள் காதுகளில் பூச்சூற்றும் நாடகங்கள் வெளிப்படத் தொடங்கிவிட்டன.

பொருளாதாரத்தில் அதல பாதாளத்தில் விழுந்து கிடந்த நாடு இன்று ஓரளவு மூச்சு விடுகின்றது என்றால் அந்த மீட்சிக்காக நமது நாடு தனது கட்டமைப்பை பொருளாதார ஏற்றுமதி நாடாக மாற்றி விடவில்லை. அல்லது உற்பத்திப் பொருளாதாரமோ, விவசாய பொருளாதாரமோ இங்கு மேம்படுத்தப்பட்டுவிடவில்லை. மாறாக, மக்கள் மீதான சுமை - வரிச் சுமை - அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு விடயத்துக்கும் - ஒவ்வொரு பொருளுக்கும் - ஒவ்வொரு சேவைக்கும் - மக்களிடமிருந்து, அவர்களுக்கே தெரியாமல் பெருந்தொகை பணம் வரியாக - சுளையாக - சுரண்டப்படுகின்றது. அதன் மூலம் நாடு மீண்டெழுந்து மூச்சு விட்டு நிற்கின்றது.

இப்போது அந்த வரிக்குச் சலுகை வழங்கப் போகிறார்கள் என பிரதான வேட்பாளர்கள் மக்கள் காதில் பூச்சுற்றத் தொடங்கி விட்டார்கள்.

இந்த வரிச்சலுகை என்ற நிவாரணம் கடைசியாக எத்தகைய வேதனையை வேண்டித் தரும் என்பது இலங்கை மக்களுக்கு நன்கு தெரியும்.

அரசியல் ஆதாயங்களுக்காக - செல்வாக்கு ஈட்டுவதற்காக - அரசியல்வாதிகள் வழங்க முற்படும் வரிச்சலுகை கடைசியில் தங்களுக்குக் கழுத்துக்குக் கத்தியாக வந்து சேரும் என்ற அனுபவப்பாடம் இலங்கை மக்களுக்குத் தாராளமாக உண்டு.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 69 லட்சம் வாக்குகளுடன் பெருவெற்றியீட்டிய கோட்டாபய ராஜபக்ஷ, தாம் அதிகார பீடத்துக்கு - ஆட்சிக் கட்டுக்கு - வந்ததும் அடுத்த இடம் பெறப் போகின்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பல்லாயிரம் பேரின் வரிக்கோவைகளை அடியோடு மூடி, வரிச் சலுகைகளைக் கண்மண் தெரியாமல் வாரி வழங்கினார்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சி இரட்டை வேகம் எடுத்தமைக்கு பொருளாதாரச் சிந்தனையற்ற அவரின் அந்த நடவடிக்கையும் முக்கிய காரணங்களில் ஒன்று என இன்றளவும் விமர்சிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

அது போன்ற வரி சலுகைகளைத் தான் பிரதான வேட்பாளர்கள் இப்போது அறிவிக்கிறார்கள். அதன் மூலம் மக்கள் காதில் பூச்சுற்ற விழைகின்றார்கள்.

தங்களது தேசிய மக்கள் சக்தி அரசு அதிகாரத்துக்கு வந்ததும் உணவு, மருத்துவ சேவைகள், கல்வி தொடர்பான விடயங்களுக்கான பெறுமதி சேர் (வற்) வரி நீக்கப்படும் என தேசிய மக்கள் கட்சியின் வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க அறிவிக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தமது அரசு வரி செலுத்துவோருக்கு சில நிவாரணங்களை வழங்கச் சிந்திப்பதாகக் கூறுகின்றார். வழங்கப்படக் கூடிய வரிச்சலுகைகள் தொடர்பில் திறைசேரியும், சர்வதேச நாணய நிதியமும் வெவ்வேறான திட்டங்களைத் தந்து இருக்கின்றன என்றும், அவற்றைத் தான் பரிசீலித்து வருகின்றார் என்றும் ஜனாதிபதி கூறுகிறார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் தாங்கள் அதிகாரத்துக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி, விரைந்து, வரிச் சலுகைகளை அறிவிப்போம் என்கின்றது.

ஆனால் இப்படி வரிகள் வழங்குவதால் ஏற்பட போகும் இழப்புக்களைத் தங்களின் அரசு எப்படிக் கையாளப் போகின்றது - சமாளிக்கப் போகின்றது - என்பதை அவர்கள் யாருமே விளக்கவில்லை என்பதுதான் முக்கிய விடயமாகும்.

வருமானத்துக்கு மாற்று வழி தேடாமல் இத்தகைய வரிச் சலுகைகளை முன்னெடுப்பது பொருளாதாரத்தை மீண்டும் மோசமாகப் பாதிக்கும்.





# ‘தி கோட்’ படத்தில் விஜயகாந்த் பிரேமலதாவை சந்தித்தார் விஜய்

‘தி கோட்’ படத்தில் மறைந்த நடிகரும், தே.மு.தி.க. தலைவருமான விஜயகாந்த் ‘ஏ.ஐ’ மூலம் இடம்பெறும் நிலையில், நடிகர் விஜய் நேற்று தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதாவை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

வெங்கட்பிரபு இயக்கத்தில் விஜய் நடிக்கும் திரைப்படம் ‘தி கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டைம்’. எதிர்வரும் செப்டம்பர் 5 ஆம் திகதி படம் திரைக்கு வருகிறது.

இந்தப் படத்தில் மறைந்த நடிகரும், தே.மு.தி.க. தலைவருமான விஜயகாந்த்தை ‘ஏ.ஐ’ தொழில்நுட்பம் மூலம் பயன்படுத்தியுள்ளதாக தகவல் வெளியானது. மேலும், இதனை அண்மையில் நடந்த ட்ரெய்லர் வெளியீட்டு விழாவில் வெங்கட் பிரபு உறுதி செய்திருந்தார்.

இந்த நிலையில், சென்னை சாலிகிராமத்தில் உள்ள இல்லத்தில் பிரேமலதா விஜயகாந்தை நடிகர் விஜய் நேரில் சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது, இயக்குநர் வெங்கட் பிரபு மற்றும் தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி, விஜய பிரபாகரன் ஆகியோர் உடன் இருந்தனர். ‘தி கோட்’ படத்தில் விஜயகாந்தை பயன்படுத்தியதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நடிகர் விஜய், பிரேமலதாவை சந்தித்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

நன்றி தெரிவித்த பின் விஜயகாந்தின் உருவப்படத்துக்கு நடிகர் விஜய் மரியாதை செலுத்தியுள்ளார். சந்திப்பு தொடர்பான புகைப்படத்தை தனது எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்துள்ள வெங்கட் பிரபு, “விஜயகாந்த் ஆசியுடன் ‘தி கோட்” என பதிவிட்டுள்ளார்.

# மலையாள திரையுலகில் பாலியல் சுரண்டல்: ஆய்வு குழு அறிக்கையில் அதிர்ச்சி தகவல்கள்

மலையாள திரையுலகில் வாய்ப்புகளுக்காக பெண்கள் பாலியல் ரீதியாக சுரண்டப்படுகின்றனர் எனவும் பாதுகாப்பில்லாத சூழல் நிலவுகின்றது என்றும் ஹேமா கொமிட்டி அறிக்கையில் அதிர்ச்சித் தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

மலையாள நடிகர் திலீப் பாலியல் சர்ச்சையில் சிக்கியதைத் தொடர்ந்து, மலையாள திரையுலகில் நிகழும் பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் பாலின சமத்துவமின்மை தொடர்பாக ஆய்வு செய்ய கடந்த 2017 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற கேரள உயர் நீதிமன்ற நீதிபதி ஹேமா தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணை நடத்திய அந்தக் குழு கடந்த 2019 டிசம்பரில் முதலமைச்சர் பினராயி விஜயனிடம் 233 பக்க அறிக்கையை, ஆவணங்கள், ஓடியோ மற்றும் வீடியோ ஆதாரங்களுடன் சமர்ப்பித்தது. ஆனால், பல்வேறு காரணங்களால் இந்த அறிக்கையை அரசு வெளியிடாமல் இருந்தது.

இந்த நிலையில், நேற்று ஹேமா கொமிட்டி அறிக்கையை கேரள அரசு வெளியிட்டுள்ளது. அதில் இடம்பெற்றுள்ள விடயங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

மலையாள திரையுலகில் வாய்ப்புகளைப் பெற பெண்கள் பாலியல் ரீதியாக சுரண்டப்படுகிறார்கள் என்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திரையுலகில் வாய்ப்புகளைப் பெற பல முறை பாலியல் ரீதியான சுரண்டல்கள் நடைபெறுவதாகவும், ஆபத்தான சூழல் நிலவுவதாகவும் பெண்கள் தெரிவித்துள்ளனர்.

பல நடிகர்கள் திரைப்பட வாய்ப்புக்காக சமரசம் செய்து கொள்ளுமாறு பெண்களை வலியுறுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மலையாள திரையுலகில் பரவலாக பாலியல் சுரண்டல்கள் நிலவி வருவதாக அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் பெண்களை சமரசம் செய்து கொள்ள வற்புறுத்துவதாகவும், அதற்கு ஒத்துழைப்பவர்கள், ‘சமரசம் செய்துகொள்ளும் நடிகர்கள்’ என முத்திரை குத்தப்படுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் தங்களுக்கு நிகழும் பாலியல் துன்புறுத்தல் குறித்து பொலிஸில் புகார் அளிக்காததற்கு காரணம், சைபர் தாக்குதல்கள் குறித்த பயம் என குறிப்பிட்டுள்ளனர்.



“இங்கே அதிகாரம் படைத்தவர்களின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு மாஃபியா போல செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நினைத்தால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். அவர்களை எதிர்க்க முடியாது” என முன்னணி நடிகை ஒருவர் தெரிவித்துள்ளார் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

படப்பிடிப்புக்கு செல்லும் பெண்கள் ஹோட்டல்களில் அறைகளில் தங்கும்போது, குடிபோதையில் வரும் சிலர் கதவைத் தட்டுவது, அராஜகம் செய்வது போன்ற செயல்களில் ஈடுபடுவதாகவும், அதன் காரணமாக பாதுகாப்புக்காக பெற்றோர்கள் உள்ளிட்ட குடும்ப நபர்களை உடன் அழைத்துச் செல்வதாகவும் நடிகைகள் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கை குறிப்பிடும் மற்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், தனக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் குறித்து ஒரு பெண் வாய் திறந்தால், அவர் பிரச்சினைக்குரியவராக கருதப்பட்டு, அவருக்கு பட வாய்ப்புகள் இல்லாமல் போகலாம் என்பதால் அவர்கள் மௌனம் காக்கின்றனர் என ஹேமா கமிஷன் அறிக்கை தெரிவித்துள்ளது.

மேலும், இது தொடர்பாக ‘அம்மா’ (மலையாள நடிகர் சங்கம்) உள்ளிட்ட திரைப்பட சங்கங்கள் உரிய கவனம் எடுத்து பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான இறுதி வாய்ப்பு

## பேச்சுவார்த்தை தொடர்பில் அண்டனி பிளிங்கன் கருத்து

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே நடந்து வரும் காசா போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான கடைசி வாய்ப்பாக இருக்கலாம் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் அண்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

காசா போர்நிறுத்தம் மற்றும் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தை எட்டுவதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக அண்டனி பிளிங்கன் நேற்று முன்தினம் இஸ்ரேலை சென்றடைந்தார்.

இஸ்ரேலிய ஜனாதிபதி ஐசக் ஹெர்சோக் உடன் நடந்த சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இது ஒரு முக்கியமான தருணம், கைதிகளை வீடு திரும்பச் செய்யவும், சமானத்த ஏற்படுத்தவும், நீடித்த அமைதி மற்றும் பாதுகாப்பை நிலை நிறுத்துவதற்கான சிறந்த பாதையில் அனைவரையும் அழைத்துச் செல்வதற்கான சிறந்த மற்றும் கடைசி வாய்பாக இது இருக்கலாம் என தெரிவித்துள்ளார்.

அதன்படி, பேச்சுவார்த்தைகளின் போது இஸ்ரேலின் நிலைப்பாட்டை வலுப்படுத்த காசாவில் அதன் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரவை சமீபத்தில் இராணுவத்திற்கு அறிவுறுத்தியுள்ளதாக இஸ்ரேலிய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், காசா பகுதியியல், பாலஸ்தீனியர்களுக்கு எதிரான, அடக்குமுறை, சர்வாதிகார மற்றும் வன்முறைக் கொள்கைகளை இஸ்ரேல் தொடர்வதாக ஹமாஸ் குற்றம் சாட்டியுள்ளதுடன், தங்களைத் தற்காத்துக் கொள்ள முடியாத பொதுமக்களுக்கு எதிராக இஸ்ரேல் வேண்டுமென்றே வன்முறைச் செயல்களை தொடர்வதாகவும் வன்மையாக கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.










# தீவிரமடையும் மக்கள் போராட்டம் வெனிசுலாவில் தொடரும் பதற்றம்

வெனிசுலாவில் கடந்த மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் நிக்கலோஸ் மதுரோ வெற்றிபெற்றார் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து அங்கு மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், வெனிசுலா தலைநகரில் அதிகளவான பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதால் அங்கு பரபரப்பு மேலும் அதிகரித்துள்ளது.

வெனிசுலாவில் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவின் சர்ச்சைக்குரிய வெற்றிக்கு எதிராக வெனிசுலா முழுவதும் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் மக்களுடன் இணைந்து போராட்டங்களை தீவிரப்படுத்தியுள்ளனர்.

நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ தலைமறைவாக இருந்த நிலையில் தற்போது ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்களுடன் இணைந்து போராட்டங்களை ஆரம்பித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், வெனிசுலா தலைநகரில் இருந்து வெளியேறப் போவதில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ குறிப்பிட்டுள்ளார்.

மக்களை திரட்டி நாட்டில் கிளர்ச்சியை ஏற்படுத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டுள்ள மதுரோவின் ஆதரவாளர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் பொலிஸாரும் இராணுவமும் சம்பவ இடத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த மாதம் வெனிசுலாவில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்ற நிலையில் நிக்கலோஸ் மதுரோ வெற்றிபெற்றார் என அறிவிக்கப்பட்டது.

தேர்தலில் 51.02 வீத வாக்குகளை மதுரோ பெற்றுள்ளதுடன் அவரை எதிர்த்து போட்டியிட்ட பிரதான வேட்பாளர் 44.02 வீத வாக்குகளை பெற்றுள்ளார் என அந்நாட்டு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது.

எனினும் வாக்குகளை எண்ணுவதில் மோசடி இடம்பெற்றுள்ளதாக எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியிருந்தது.

மேலும் ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டுள்ள நிக்கோலஸ் மதுரோவின் வெற்றியை அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் ஏற்காத நிலையில் மதுரோவுக்கு ரஷ்யா, சீனா, கியூபா உள்ளிட்ட நாடுகள் வாழ்த்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# கொழும்புத் துறைமுகத்தில் அமெ. கடற்படைக் கப்பல்!

அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான 'USS Spruance' என்ற கப்பல் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த கப்பலானது விநியோகம் மற்றும் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

160 மீற்றர் நீளம் கொண்ட இந்த கப்பலில் சுமார் 338 பணியாளர்கள் கடமை புரிகின்றனர்.

கொமாண்டர் தோமஸ் அடம்ஸ் இந்தக் கப்பலின் கட்டளை அதிகாரி யாவார்.



இந்த கப்பலானது இன்று கொழும்பு துறைமுகத்தை விட்டு மீண்டும் புறப்படவுள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.



# தேர்தல் கண்காணிப்பில் ஐரோப்பிய ஒன்றியமும்!

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக, இலங்கைக்கான தமது தேர்தல் கண்காணிப்புக் குழுவின் பிரதானியாக ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் நாச்சோ சான்செஸ் அமோரை ஐரோப்பிய ஒன்றியம் நியமித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பைத் தொடர்ந்து, எதிர்வரும் செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காகத் தேர்தல் கண்காணிப்புக் குழுவை இலங்கைக்கு அனுப்புவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையில் தேர்தல் செயல்முறைகளை சுமார் 6 சந்தர்ப்பங்களில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழு அவதானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சிவில் பாதுகாப்புப் படையணிக்கு அரசாங்கத்திடமிருந்து நிவாரணம்

பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் சிவில் பாதுகாப்புப் படையணியானது கடந்த முப்பது வருடகால கொடூர யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தனித்துவமான பங்களிப்பை வழங்கியது.

அத்தோடு நாட்டில் அமுல்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் சமூகத்தின் நல்வாழ்விற்கும் மிக முக்கியமான பணியை ஆற்றி வருகின்றது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. .

இதனைக் கருத்திற்கொண்டு, வீடற்ற உறுப்பினர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கும், ஏற்கனவே உள்ள வீடுகளை சீரமைப்பதற்கும், இந்த படையின் மூலம் தேவையான தொழிலாளர் பங்களிப்பை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய சிவில் பாதுகாப்பு படையணியின் 100 உறுப்பினர்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அறிவித்துள்ளார்.

மேலும், பல ஆண்டுகளாக இந்த படையணியினர் விடுத்த கோரிக்கையை ஏற்று அவர்களுக்கான உதவித் தொகையை 500 ரூபாவாக அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அவர்களின் வாழ்க்கை நிலைமையை ஸ்திரப்படுத்த முடியும் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.



# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் இளைஞன் கைது

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியமுல்லை பிரதேசத்தில் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் இளைஞர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 1,020 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரையில் 631 முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 631 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 346 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 261 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 23 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.



# நாமலுக்காக நாடு முழுவதும் சென்று பிரசாரக் கூட்டங்களை நடத்துவேன்

## தந்தையார் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் வெற்றிக்காக நாடு முழுவதும் தேர்தல் பிரசாரங்களை நடத்துவேன். எம் மீதான மக்கள் நம்பிக்கை இன்றும் உறுதியாக உள்ளது. நிச்சயம் வெற்றிப் பெறுவோம்."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

களனி ரஜமஹா விகாரையில் நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தேர்தல் என்பது சவால் மிக்கது. அனைத்துத் தரப்பினரும் வெற்றி பெறவே முயற்சிப்பார்கள். ஆகவே இந்தத் தேர்தல் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்குச் சவாலானது.

எம்மை விட்டு விலகிச் சென்றவர்கள் பற்றி பேசி இனிப் பயனில்லை. செல்பவர்களை பலவந்தமாக தக்க வைத்துக் கொள்ளவும் முடியாது. பலவந்தமாகவும் வெளியேற்றவும் முடியாது. இருப்பவர்களை கொண்டே முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் வெற்றிக்காக நாடு முழுவதும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவேன். எம் மீதான மக்களின் நம்பிக்கை இன்றும் உறுதியாக உள்ளது. நிச்சயம் நாங்கள் வெற்றி பெறுவோம்.

தேர்தல் காலத்தில் எம்மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தேர்தல் காலப் பிரசாரமாகக் காணப்படுகின்றன. சேறு பூசுவதை விடுத்து கொள்கையை முன்னிலைப்படுத்தி செயற்படுமாறு அரசியல் தரப்பினர்களிடம் கேட்டுக் கொள்கிறோம்."– என்றார்.

# மட்டு. அப்போஸ்தலிக்க பரிபாலகராக அன்ரன் றஞ்சித் ஆண்டகை நியமனம்

(வாஸ் கூஞ்ஞ)

அதிமேதகு அன்ரன் றஞ்சித் ஆண்டகை அவர்கள் திருந்தந்தை பிரான்சீஸ் அவர்களால் நேற்றுத் திங்கள் கிழமை மாலை 3.30 மணியளவில் மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமனம் பெற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.



இவர் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராக இருந்து வந்த நிலையிலேயே மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமனம் பெற்றிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 20.08.2024




இன்று மிகவும் பிரமாதமான நாள். உங்களிடம் ஆற்றலும் நம்பிக்கையும் காணப்படும். இது வெற்றிக்கு வழி காட்டும்.

நீங்கள் பணியிடத்தில் உங்கள் அபாரமான முயற்சிகளின் மூலம் உங்கள் திறமைகளை பயன்படுத்தி பணியாற்றுவீர்கள். இதனால் நீங்கள் பணியிடத்தில் சகபணியாளர்களை விட முன்னணி வகிப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் நீங்கள் நட்பான உறவு முறை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உங்கள் துணையிடம் வெளிப்படையாக உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள்.

இன்று பண வரவு தாராளமாக இருக்கும். சேமிப் பதற்கான வாய்ப்பும் அதிகம். பூர்வீக சொத்து வகையில் பணவரவு காணப்படும்.

இன்று உங்களிடம் இருக்கும் ஆற்றல் காரணமாக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். உங்கள் நட்பான அணுகுமுறை காரணமாக நீங்கள் இன்று வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணியிடத்தில் சாதகமான சூழ்நிலை காணப்படும். இதனால் பணியில் விருப்பமும் நல்ல பலனும் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். அனைத்தும் உங்களுக்கு சாதகமாக நடக்கும். சேமிக் கும் வாய்ப்பும் அதிகரிக்கும். இன்று சேமிக்கும் பணம் உங்களுக்கு எதிர்காலத்தில் பயன்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உற்சாகம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று நம்பிக்கை உணர்வுடன் காணபடுவீர்கள். இன்று புது நண்பர்களை உருவாக்கிக் கொள்ள வாய்ப்பு உள்ளது.

பணியில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் தனித்த திறமை மூலம் நீங்கள் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் திறமையாக முடிப்பீர்கள். இதனால் தரமான பணிகளை வழங்குவீர்கள்.

உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக சேமிப்பை பராமரிக்கும் வாய்ப்பு உள்ளது. பணியிடத்தில் பதிவு உயர்வுக்கான வாய்ப்பு நிச்சயம் உள்ளது.

மகிழ்ச்சி மற்றும் சகஜமான அணுகுமுறை காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று எடுக்கும் முடிவுகள் நன் மையை அளிக்கும். இதனால் நீங்கள் புத்துணர்ச்சியுடனும் அதிக உறுதி யுடனும் நிறைய சாதிப்பீர்கள்.

நீங்கள் பணியில் இன்று சேவை மனப்பான்மை யுடன் செயல்படுவீர்கள். இதனால் உயர்ந்த நிலைக்கு செல்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் நேர்மையான உழைப்பின் மூலம் பணம் சம்பாதிக்கும் நாள். இன்று நீங்கள் பயனுள்ள முதலீடுகளை மேற்கொள்ளலாம்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் இன்று சுறுசுறுப்பாக இருப்பீர்கள்.




இன்று சற்று ஏமாற்றமான நாளாக இருக்கும். இன்று அவ்வளவு எளிதாக முன்னேற்றம் கிடைக்காது. சில சமயங் களில் நீங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள்.

மேலதிகாரிகள் உங்கள் செயல் திறனில் திருப்தி அடைய மாட்டார்கள். இது உங்களுக்கு சற்று ஏமாற்றத்தை அளிக்கும். பணி களைக் கையாளும் போது கவனம் தேவை.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணை யுடன் வாய்ச்சண்டை ஏற்படும். நட்பாக அணுகுவதன் மூலம் பிரச்சினைகளை பேசி தீர்த்துக் கொள்ளலாம்.

இன்று பண இழப்பு காணப்படும். உங்கள் தாயின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்வீர்கள். பணத்தை கவனமா கவும் எச்சரிக்கையுடனும் கையாள வேண்டும்.

இன்று பல் வலி காணப்படலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. உங்கள் இலக்குகளை அடைவதற்கான உற்சாகம் குறைந்து காணப்படுவீர்கள். உங்களை உற் சாகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மன ஆற்றலை வளர்த்துக் கொள் ளுங்கள்.

இன்று அதிக பணிகள் காணப்படும். பணிகளை முறையாக திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும். உங்கள் நன்மதிப்புக்கு பாதிப்பு ஏற்படும்.

உங்கள் இருவரிடையே காணப்படும் தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் இன்று வாக்குவாதம் காணப்படும்.

இன்று உங்கள் குடும்பத்துக்காக அதிக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று மந்தமான நாள். குழப்பமான எண்ணங்கள் காணப்படும். நீங்கள் அனுசரணையோடு நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணியில் வளர்ச்சி பாதிக் கப்படும். கடினமான பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ளாததே இதற்கு காரணம் ஆகும்.

உறவில் காணப்படும் மோதல் காரணமாக உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள்.உங்கள் துணை யுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்பட உணர்ச்சிகளை கட்டுப் படுத்த வேண்டும்.

நீங்கள் பதவி உயர்வு மற்றும் அதன் மூலம் ஏற்படும் பண வரவு போன்ற வாய்பை இழப்பீர்கள். இதனால் பண வரவு குறைவாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

கண்கள் மற்றும் பற்களில் கவனம் தேவை.




இன்று அமைதியின்மை காணப்படும். நீங்கள் பொறுமையுடன இருந்தால் இன்றைய செயல்களை எளிதாக கையாள இயலும்.

பணியைப் பொறுத்தவரை இன்று சலிப்பு காணப்படும். இயந்திரத்தன மாக காணப்படும். நீங்கள் பணியில் கட்டுப்பாட்டை இழந்து காணப்படுவீர்கள்.

உங்கள் துணையுடன் புரிந்துணர்வு குறைந்து காணப்படும். நீங்கள் அவரை தவறாக புரிந்து கொண்டதே இதற்கு காரணமாக இருக்கும்.

பணப்புழக்கம் இன்று சிறப்பாக இருக்காது. சேமிப் பதற்கான வாய்ப்பை இழப்பீர்கள். எனவே கவனமாகவும் விவேகத்துடனும் செயல் பட வேண்டும்.

கண் எரிச்சலால் பாதிப்பு காணப்படும். கண்களுக்கு மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது.ஒவ்வாமை பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 20.08.2024


தனுசு

இன்று மிகவும் அனுகூலமான நாள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம். இன்று மனதில் நம்பிக்கை காணப்படும்.

இன்று பணியில் நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் கடின உழைப்பின் மூலம் மேலதிகாரிகளின் நம்பிக்கையை பெருவீர்கள்.

உங்கள் துணையுடனான உங்கள் அணுகுமுறை சிறப்பாக இருக்கும். உங்கள் துணையிடம் நல்ல உணர்வை நீங்கள் பராமரிப்பதே இதற்கு காரணம்.

இன்று நிதிநிலையில் வளர்ச்சி காணப்படும். இன்று நல்ல சேமிப்பை பராமரிப்பீர்கள். அது பிற்காலத்தில் உதவும்.

உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


கும்பம்

இன்று பதற்றம் காணப்படும்.தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதியும் மன ஆறுதலும் பெறலாம்.

பணியில் மந்தத் தன்மை காணப்படும். அதிகப் பணிகள் காரணமாக பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. எந்தச் சிக்கலுமின்றி பணியாற்ற திட்டமிடுதல் அவசியம்.

குழப்பமான மன நிலை உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். இதனால் இருவரிடையே மோதல் காணப்படும்.

அதிகரிக்கும் பொறுப்புகளை சமாளிக்க கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதனால் உங்கள் கடன் தொகை அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அதிக உழைப்பு மற்றும் சோர்வு காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.


மகரம்

இன்று சாதகமான நாள் அல்ல. சில சமயங்களில் நீங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். அதனால் மதிப்பு மிக்க வாயப்புகளை இழப்பீர்கள். நீங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடத்தில் சாதகமான நிலை இருக்காது. உங்களின் கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்ள மாட்டீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும் இது உங்களுக்குசற்று கவலை அளிக்கும். எனவே நீங்கள் திட்டமிட்டு பணத்தை சாதுர்யமாக கையாள வேண்டும்.

பதற்றம் காரணமாக கால் மற்றும் தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.


மீனம்

இன்று அமைதியான மனநிலை காணப்படாது. பாதுகாப்பின்மை மற்றும் தன்னம்பிக்கைஇன்மையே இதற்கு காரணம் ஆகும். பாதகமான விளைவு ஏற்படும் என்று மனதில் எண்ணுவீர்கள்.

இன்று பணியில் சிறப்பான வளர்ச்சி இருக்காது. நீங்கள் திட்டமிட்டு கவனமாகப் பணியாற்ற வேண்டும். இல்லையெனில் வெற்றி கிடைக்காது.

உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்த முயலுங்கள்.நட்பான அணுகுமுறையை பராமரியுங்கள். நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தி அவரை மகிழ்ச் செய்யுங்கள்.

நீங்கள் பெரிய முதலீடு செய்வதற்கு திட்டமிடுவீர்கள். இதனால் பண இழப்பு ஏற்படும். எனவே இந்த திட்டத்தை தவிர்க்கவும். பண விஷயத்தில் கட்டுப்பாட்டுடன் இருக்கவும்.



Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94777 546 546 | +94770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park